


<u>நகர் ஊரமைப்பு - இராமநாதபுரம் மாவட்டம்.</u>

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம் , போகலூர் ஊராட்சி ஒன்றியம் ,
மஞ்சூர் குரூப் / கிராமம் நில அளவை எண்: 181/4B -இல் அமையும் குடியிருப்பு
மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி)

Online Reference No: 5BOSEAXK/567/003/2022/RMD
அளவு திட்டம் : 1:800

வ

மனைப்பிரிவு எல்லை -
நிலையிலுள்ள சாலை -
உத்தேச மனைபிரிவு சாலை -
உள்ளாட்சி உபயோக மனை -
மின்வாரிய உபயோக மனை -

<u>மனைப்பிரிவு விபரம்:</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு | = | 7650.00 சமீ ( 01 ஏக்கர் 89 செண்ட்) |
| சாலையின் பரப்பளவு | = | 3050.96 சமீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவு | = | 4599.04 சமீ |
| கோரிய மனைகள் | = | 42 |
| ஒதுக்கிய மனைகள் | = | 39 |

<u>பொது ஒதுக்கீடுகள்:</u>

| | | | |
|---|---|---|---|
| உள்ளாட்சி உபயோக மனை (LOCAL BODY) | - | 32.33 | சமீ (0.70%) |
| மின்வாரிய உபயோக மனை (TANGEDCO) | - | 26.52 | சமீ (0.58%) |

மனைப்பிரிவிற்கு 10% OSR பகுதிக்கு பதிலாக அரசு வழிகாட்டி மதிப்பீட்டிற்கு செலுத்தப்பட்டுள்ளது.

<u>மூலை முடக்கு:</u>

7.20மீ வரை - 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்
9.00மீ க்கு மேல் 12.0மீ வரை - 3.00மீ x 3.00மீ விடப்பட வேண்டும்

<u>நிபந்தனைகள்:</u>

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதிசெய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண். 21 ஊரக வளர்ச்சித்துறை நாள் 16.06.2003-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரிக்கு முழு திருப்தி உள்ளது என சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்விதமுன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்பத்துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் ள்ள நில உரிமையை உறதிபடுத்தவில்லை. தொழில நுட்ப திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களான கிரையப்பத்திரம் குத்தகைப்பத்திரம் பட்டா தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்றும் சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 5மீ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே EB LINE,LT LINE மற்றும் TELEPHONE LINE செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
11. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி [UD4(1)] துறை நாள்:09.12.2021

ம.வ/மா.ந.ஊ.உ.இ.அ.(இரா.மா) எண் : 28 / 2022 (ം)

**உத்தேச சாலை விபரம்**

| சாலை எண் | சாலை அகலம் | சாலை பரப்பளவு |
|---|---|---|
| 1. | 7.00மீ | 824.87 |
| 2. | 9.00மீ | 267.26 |
| 3. | 7.20மீ | 364.65 |
| 4. | 10.00மீ | 872.26 |
| 5. | 9.00மீ | 530.00 |
| 6. | 7.20மீ | 156.92 |
| மூலை முடுக்கு - 35.00 ச.மீ | | |
| மொத்தம் - 3050.96 ச.மீ | | |

Document certified by Selvaraj S.

Signed by: Assistant Director
Location:Ramanathapuram
Date:2022.09.21 12:39:24

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
இராமநாதபுரம் மாவட்டம்